**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

**OS.No**.1001/2023 பெயர்- ஜெயலட்சுமி நாள்.05.03.2024

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

என்னுடைய அப்பா பெயர் பூபாலன் ஆகும். என்னுடைய அம்மா பெயர் ராமலட்சுமி ஆகும். வெற்றிவேல், யுவராஜ், ராதா ஆகியோர் என்னுடன் பிறந்தவர்கள் ஆவார்கள். நானும், ராதாவும் இரட்டையர்கள் என்றால் சரிதான். ராதாவின் கணவர்தான் இந்த வழக்கின் பிரதிவாதி என்றால் சரிதான். வெற்றிவேல் எலக்ட்ரிசியன் வேலை செய்கிறார். அவர் கூலிக்கு வேலை செய்கிறார். யுவராஜும் கூலிக்கு எலக்ட்ரிசியன் வேலை செய்கிறார். நான் துணி கடைக்கு கூலி வேலைக்கு செல்கிறேன். என் கணவர் கல்லூரியில் லேப் அசிட்டெண்டாக வேலை பார்த்து வருகிறார். என் கணவருக்கு மாதம் ரூ.15000/- சம்பளம் ஆகும். எனக்கும் மாதம் ரூ.15000/- சம்பளம் ஆகும். ராதா மற்றும் அவருடைய கணவர் குமரேசனை தவிர நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக உள்ளோம் என்றால் சரிதான். 28.07.2022 ல் நான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததாக கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி குமரேசன் சொந்தமாக ஏதோ தொழில் செய்து வருவதாக கூறினார். சக்ரா டிரேடர்ஸ் என்ற பெயரில் தொழில் செய்து வருவதாக கூறினார். என்ன தொழில் அதில் என்ன வருமானம் என்ற சங்கதிகள் எனக்கு குறிப்பாக தெரியாது. காசோலையை குமரேசனே பூர்த்தி செய்து கொடுத்தார். காசோலையை குமரேசன் என் முன்னிலையில் பூர்த்தி செய்து, கையெழுத்து செய்து கொடுத்ததாகதான் என் வழக்குரையில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஊதா நிற மையினால் எழுதினார். காசோலை முழுவதும் ஊதா நிற மையினால் பூர்த்தி செய்யப்பட்டதா என்றால் ஆமாம். தற்சமயம் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 காசோலையில் என் பெயர் தொகை எண்ணாலும் எழுத்தாலும் எழுதப்பட்டுள்ளதும், தேதி எழுதப்பட்டுள்ளதும், அடர்ந்த ஊதா நிற மையினாலும் கையெழுத்து வேறு ஒரு ஊதா நிற மையினாலும் போடப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதிதான் போட்டார், அதுகுறித்து எனக்கு தெரியாது. நான் 5 ம் வகுப்பு வரைதான் படித்துள்ளேன். என் கணவர் டிப்ளமோ EEE படித்துள்ளார். நான் வாடகை வீட்டில் வசித்து வருகிறேன். எனக்கும், என் கணவருக்கும் சொந்தமாக வீடு கிடையாது. 02.06.2022 ல் பிரதிவாதி என்னிடம் வந்து பணம் கேட்டார். எனது சார்பாக அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பிற்கு அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பின்

சங்கதிகளை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன், அதில் உள்ள சங்கதிகள் பொய்யானவைகள் ஆகும். எனது சகோதரர் வெற்றிவேலும், யுவராஜும் பிரதிவாதி குமரேசன் மற்றும் அவரது மனைவியும், எங்களது சகோதரியுமான ராதா மீது தலா 9 லட்சம் ரூபாய் காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். எனது வழக்கறிஞர்தான் மேற்படி வழக்கில் எனது சகோதரர்கள் சார்பில் ஆஜராகியுள்ளனர் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.4 பதில் அறிவிப்பில் 3 வது பக்கத்தில் 2 வது பத்தியில் 018345 குமரேசனுக்கு சொந்தமான காசோலை, 624139 ராதாவுக்கு சொந்தமான காசோலை ஆகியவற்றை வசூலுக்கு தாக்கல் செய்து அதனடிப்படையில் 20.02.2023 ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பிலேயே இந்த வழக்கு காசோலை மற்றும் என் கணவர் பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மற்றொரு வழக்கு காசோலை ஆகிய இரண்டும் குறிப்பிடப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டதற்கு பின்னிட்டு மேற்படி காசோலை வசூலுக்கு தாக்கல் செய்து அதே வழக்கறிஞர் மூலமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு காசோலை கொடுத்தது குமரேசன். வெற்றிவேல் மற்றும் யுவராஜுக்கு காசோலைகள் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. 25.02.2023 ம் தேதியில் அனுப்பப்பட்ட மறுப்பு அறிவிப்பிலேயே இந்த வழக்கு காசோலை குறித்து குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அதற்கு பின்னிட்டு இந்த வழக்கு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்து, அதனடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு பொய்யானது என்றால் சரியல்ல. நான் வருமான வரி செலுத்தும் நபர் அல்ல என்றால் சரிதான். என் கணவரும் வருமான வரி செலுத்தும் நபர் அல்ல என்றால் சரிதான். வருமானவரி செலுத்தும் அளவிற்கு எங்களது வருமானம் இல்லாத காரணத்தினால்தான் நானும், என் கணவரும் வருமானவரி செலுத்தவில்லை என்றால் சரிதான். வங்கியில் தொகையை நான் சேமித்து வைப்பது இல்லை, வீட்டிலேயே சேமித்து வைத்துக்கொள்வேன். அம்மா பூர்வீக சொத்தை விற்று ஒரு 3,4 லட்சம் கொடுத்தார்கள். அதை வைத்துதான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன். என் அம்மா பூர்வீக சொத்தை விற்பனை செய்து பணம் கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில், எப்பொழுது சொத்தை விற்றார்கள் என்றால் சுமார் 5,6 வருடங்களுக்கு முன்பாக விற்பனை செய்தார். 5,6 வருடங்களாக பணத்தை அவ்வாறே

வைத்திருந்தேனா என்றால் சீட்டு போட்டு கொஞ்சம், கொஞ்சமா சேமித்து வைத்திருந்தேன். யாரிடம் சீட்டு போட்டேன், எவ்வளவிற்கு சீட்டு போட்டேன் என்ற விவரங்கள் இல்லை என்றால் சரிதான். அம்மா விற்பனை செய்த சொத்தின் விவரங்கள் ஆகியவற்றிற்கான கணக்குவிவரங்கள் உள்ளதா என்றால் என் அம்மாவிற்குதான் தெரியும். என் அம்மாவை எனது தரப்பு சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் நிலையில் எத்தனை மணிக்கு எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் எனது வீட்டில் வைத்து மதியம் நேரத்தில் கொடுத்தேன். நான் பணம் கடன் கொடுத்ததற்கு பின்னிட்டு என் கணவர் பணம் கொடுத்தார். என் கணவர் எந்த தேதியில் பணம் கொடுத்தார் என்றால் அதை அவரைதான் கேட்கவேண்டும், எனக்கு தெரியாது. நானும், என் கணவரும் ஒன்றாகதான் வசித்து வருகிறோம். நான் பணம் கடன் கொடுத்தபோது என் அண்ணி மகன் திலீப்குமார் உடனிருந்தார். அவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் விசாரிக்க உள்ளேன். பிரதிவாதிக்கு நான் பணம் கொடுக்க, அவர் எனக்கு காசோலை கொடுக்க ஆன வரவு செலவு எவ்வளவு நேரம் நடந்தது என்றால் சுமார் 1 மணி நேரம் இருக்கும். நான் 500 ரூபாய் நோட்டுகளாக 18 கட்டுகள் கொடுத்தேன். வட்டி எதுவும் அதுசமயம் வாங்கவில்லை, அவர்கள் வட்டி தருவதாக கூறினார்கள், நம்பிக்கையின் பேரில் கொடுத்தேன். அவர்களாகதான் காசோலை கொடுத்தார்கள். என் அம்மா எனக்கு கொடுத்த தொகை எத்தனை ரூபாய் நோட்டுகளாக கொடுத்தார் என்பது தற்சமயம் நினைவு இல்லை. என் அம்மா கொடுத்த ரூபாய் நோட்டுகளை அப்படியே வைத்து பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன் என்றால் இல்லை, அந்த தொகையை வைத்து வரவு செலவு செய்து கொண்டிருந்தேன். நான் காலை 09.30 வேலைக்கு போனால் இரவு 8 மணிக்குதான் திரும்ப வருவேன். நான் ஈரோடு பேபி ஷாப்பில் வேலை பார்க்கிறேன். 10, 12 வருடங்களாக அங்கு நான் வேலை பார்த்து வருகிறேன். என் அம்மாவின் பணத்தை கொடுத்து சீட்டு போட்டேன் மற்ற வரவு செலவுகள் செய்தேன் என்ற நிலையில் அதற்கான கணக்கு வழக்குகள் உள்ளனவா என்றால் சிலவற்றிற்கு உண்டு, சிலவற்றிற்கு இல்லை. மகளிர் குழுவில் 1 1/2 லட்ச அளவிற்கு நான் கடன் வாங்கியுள்ளேன். என்னிடம் பணம் இல்லாத காரணத்தினால் மகளிர் குழுவில் கடன் வாங்கினேன் என்றால் ரொட்டேசனுக்காக வாங்கினேன். கொஞ்சம் சேமித்து வைக்கலாம் என்று மகளிர் குழுவில் கடன் வாங்கினேன் சம்பளத்தை கொண்டு கொஞ்சம் கொஞ்சம் கட்டிவிடலாம் என்று வாங்கினேன். நான் ஆரம்பத்தில் வேலைக்கு

சென்றபோது மாதம் 10 ஆயிரம் சம்பளம் வாங்கினேன்,, கமிஷன் வாங்கியும் அதையும் கொஞ்சம் கொஞ்சமா சேமித்து வைத்திருந்தேன். மாதம் மாதம் ரூபாய் 3 முதல் 4 ஆயிரமாக கமிஷன் வரும். நானே மிகவும் பொருளாதார ரீதியாக கஷ்டப்படும் குடும்பம் என்றால் சரிதான். என் கணவரும் பொருளாதார ரீதியாக கஷ்டப்படுகிறார் என்றால் சரிதான். உண்மையிலே பிரதிவாதி நான் கூறுவதுபோல் என்னிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்றாலும், அதற்கான என்னிடம் காசோலை கொடுக்கவில்லை என்றாலும் நான் பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதியும், எனது சகோதரியும் பகவதி என்ற பெண்ணை எனக்கு அறிமுகப்படுத்தினார்கள் என்றாலும், பகவதியிடம் நான் முதலீடு செய்து தொகையை அவர் ஏமாற்றிவிட்டு ஓடிவிட்ட காரணத்தினால், பிரதிவாதியின் வீட்டிற்கு எப்பொழுதும் செல்லும் என்னுடைய சகோதரர் வெற்றிவேலை வைத்து பிரதிவாதியின் வீட்டில் வைத்திருந்த பிரதிவாதியின் காசோலைகள் இரண்டு மற்றும் பிரதிவாதியின் மனைவியின் காசோலைகள் இரண்டு மற்றும் 20 ரூபாய் பத்திரம் இரண்டு மற்றும் அவருக்கு சொந்தமான கிரய பத்திரம் அசல் ஆகியவற்றை எடுத்து வந்து பிரதிவாதியை மிரட்டி பணம் வசூல் செய்ய முற்பட்டதால் எங்களுக்குள் மனகசப்பு ஏற்பட்டு, வெற்றிவேல், யுவராஜ், நான் மற்றும் எனது கணவர் தலா 9 லட்சம் வீதம் பிரதிவாதி மற்றும் அவருடைய மனைவி மீது காசோலைகளை வைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சட்டப்படி தள்ளுபடி செய்யப்படதக்கது என்றால் சரியல்ல.